பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 08 புதன்கிழமை 22.06.2022 கதிர் 120

## வெடிகுண்டுகளுடன் இரண்டு பேர் கைது!



யாழ்., புலோப்பளைப் பகுதியில் வெடிமருந்து பெறும் நோக்கில் குண்டுகளை மறைத்துவைத்திருந்த இருவர் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

☞2



## யாழ். கோட்டைக்கு அருகில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், கோட்டை முனீஸ்வரன் கோயிலுக்குப் பின் பகுதியிலுள்ள அகழியில் இனந் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் சடலம் ஒன்று காணப்படுகின்றது என இன்று யாழ்ப்பாணம் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் சடலம் மீட்கப்பட்டது.

குறித்த சடலம் அடையாளம் காணப்படாத நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இலங்கை வருகின்றது இந்திய உயர்மட்டக் குழு

## கோட்டா, ரணிலுடன் முக்கிய பேச்சு



இந்திய உயர்மட்டத் தூதுக் குழு நாளை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

பிரதான பொருளாதார ஆலோசகர் வி. ஆனந்த நாகேஸ்வரன் தலைமையிலான குழுவினரே இலங்கை வருகின்றனர்.

☞2

## வவுனியா வர்த்தகர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு!

(வவுனியா நிருபர்)

வவுனியா, வேப்பங்குளம் பத்திரகாளியம்மன் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள வாகனங்கள் பழுது பார்க்கும் நிலைய வளாக கிணற்றிலிருந்து இன்று காலை ஆண் ஒருவரின் சடலத்தை நெளுக்குளம் பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்.

குறித்த நபர் நேற்று மாலை வீட்டிலிருந்து வெளியேறிய நிலையிலேயே இன்று காலை கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளளார்.

இந்த மரணம் தற்கொலையா அல்லது கொலையா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வவுனியா நகர் பகுதியில் இயங்கும் தனியார் வர்த்தக நிலையத்தின் உரிமையாளரான 50

☞2

## ரணிலின் வீட்டுக்கு அருகில் பதற்றம்; சஜித் கட்சியின் பெண்கள் போராட்டம்

### பொலிஸாரைக் கட்டியணைத்தார் ஹிருணிகா






அதிகரிக்கும் விலைவாசி, பொருள்களின் தட்டுப்பாடு ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கு அருகில் இன்று முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தால்

☞2

## சபாநாயகர் முன் தம்மிக்க எம்.பியாகப் பதவியேற்பு



பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரேரா நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றார்.

இன்று முற்பகல் 10 மணிக்கு நாடாளுமன்றம் கூடியபோது, அவர் சபாநாயகர் மஹிந்த யாப்பா முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் இராஜிநாமாவைத் தொடர்ந்து

☞2

## எரிபொருளுக்காக வீதியில் நீண்ட வரிசையில் காத்திருப்பவர்களுக்கு நீராகாரம் வழங்குங்கள்

### வடக்கு மாகாண ஆளுநர் வேண்டுகோள்



எரிபொருளுக்காக வீதிகளில் நீண்ட வரிசைகளில் மணிக்கணக்காகக் காத்திருக்கும் மக்களுக்கு உள்ளூராட்சி சபைகள் மற்றும் பொதுஅமைப்புக்கள்இயன்றவரை நீராகாரத்தை வழங்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் தெரிவிக்கையில்,

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவும் நிலையில் வடக்கு மாகாணத்திலும் மக்கள் மணிக்கணக்கில் வெயிலில் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றார்கள்.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள் விநியோகம் இடம்பெற்று வருவதால் அதனைப் பெறுவதற்காக நோய் நிலைமை உள்ளவர்களும் எரிபொருளுக்காக

☞2

## மத்திய வங்கி ஆளுநரை நீக்கும் தீர்மானம் இல்லை

### ஆளுந்தரப்புக் கூட்டத்தில் கோட்டா உறுதி



(செய்தி 07ஆம் பக்கத்தில்)

## வீதியைக் கடக்க முற்பட்ட சிப்பாய் பிக்கப் மோதி பரிதாப உயிரிழப்பு



(வவுனியா நிருபர்)

வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் பஸ்ஸில் இருந்து இறங்கி வீதியைக் கடக்க முற்பட்ட இராணுவச் சிப்பாய் மீது பிக்கப் வாகனம் மோதியதில் அவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

முல்லைத்தீவுப் பகுதியிலுள்ள இராணுவ முகாம் ஒன்றில் பணியாற்றும் இராணுவச் சிப்பாய்

☞2

## முன்னாள் போராளி ஒருவருக்கு துப்பாக்கிமுனையில் அச்சுறுத்தல்

### புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு



முல்லைத்தீவு மாவட்டத்தின் சமூக செயற்பாட்டாளரும் முன்னாள் போராளியுமான வேலுப்பிள்ளை மாதவமேஜர் தனக்கு துப்பாக்கிமுனையில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது எனப் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்

இரண்டாம் வட்டாரம், புதுக்குடியிருப்பு பகுதியில் வசித்து வருகின்ற வேலுப்பிள்ளை மாதவமேஜரின் வீட்டுக்குக் கடந்த 15ஆம் திகதி இரவு வேளையில் சென்ற 2 பேர் துப்பாக்கிமுனையில் தன்னை அச்சுறுத்தினர் என்று தெரிவித்தே குறித்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது

குறித்த முறைப்பாட்டை நேற்றுப் பதிவு செய்த சமூக செயற்பாட்டாளரும் முன்னாள் போராளியுமான வேலுப்பிள்ளை மாதவமேயர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த 12ஆம் திகதி குருந்தூர்மலையில் ஆதிசிவன் ஐயனார் ஆலயம் இருந்த பகுதியில்

☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


## சபாநாயகர் முன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெற்றிடமாகிய ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசியப்பட்டில் ஆசனத்துக்கே தம்மிக்க பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர், நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்பதைச் சவாலுக்குட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டிருந்த 5 அடிப்படை உரிமை மனுக்களையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமலேயே உயர்நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

இதையடுத்து தம்மிக்க பெரேரா இன்று நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றுள்ளதுடன், கூடியவிரைவில் முதலீட்டு ஊக்குவிப்பு தொடர்பான அமைச்சராகவும் பதவியேற்கவுள்ளார்.

## ரணிலின் வீட்டுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பு - 07 பகுதியில் பதற்றமான நிலைமை நிலவியது.

ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அமைப்பால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தலைமையிலான குழுவினர், பிரதமரின் வீடு அமைந்துள்ள பகுதிக்குள் செல்ல முயன்றதால் அங்கு வீதியில் தடைகளைப் போட்டு பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் குவிக்கப்பட்டனர்.

இதன்போது கடமையில் இருந்த பெண் பொலிஸாரை முன்னாள் எம்.பி. ஹிருணிகா பிரேமசந்திர கட்டியணைத்து ஹக் செய்தார்.

## எரிபொருளுக்காக .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மணிக்கணக்காகக் காத்திருக்கின்ற நிலைமையை நான் உணர்கின்றேன்.

ஆகவே, இயன்றவரை எரிபொருளுக்காக வரிசையில் காத்திருக்கும் மக்களுக்கு தற்போதைய தருணத்தில் நீராகாரத்தை வழங்கி உதவுமாறு உள்ளூராட்சி சபைகள், சமூக அமைப்புக்கள் மற்றும் கொடை வள்ளல்கள் ஆகியோரைக் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

## வீதியைக் கடக்க முற்பட்ட ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒருவர் விடுமுறையில் வீடு சென்று இ.போ.ச. பஸ்ஸில் மீண்டும் கடமைக்குத் திரும்பியபோது வவுனியா - ஈரப்பெரியகுளம் பகுதியிலுள்ள இராணுவ முகாமில் ஆவணம் ஒன்றை ஒப்படைப்பதற்காக பஸ்ஸில் இருந்து இறங்கி வீதியைக் கடக்க முற்பட்டார். இதன்போது எதிர்த்திசையில் வந்த பிக்கப் வாகனம் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து இராணுவச் சிப்பாயை மோதியதில் அவர் 7 மீற்றர் தூரம் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும், வைத்தியசாலைக்குக் கொண்டு வருவதற்கு முன்னரே அவர் இறந்துவிட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் ஈரப்பெரியகுளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (100)

## முன்னாள் போராளி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நீதிமன்ற உத்தரவை மீறி பௌத்த விகாரை அமைக்கப்பட்டு புத்தர் சிலை பிரதிஷ்டை நிகழ்வு இடம்பெறவிருந்த நிலையில் அதனைத் தடுப்பதற்காக நாங்கள் அங்கு சென்றிருந்தோம்.

அங்கு வருகை தந்த சிங்கள மக்கள் மத்தியில் சிங்கள மொழி தெரிந்த காரணத்தால் நான் அவர்களுடைய மொழியில் அவர்களுக்குச் சில தகவல்களை வழங்கியிருந்தேன்.

இந்நிலையில், இந்த விடயங்களை முன்னிறுத்தி கடந்த 15ம் திகதி அதிகாலை 1.30 மணிக்கு கைத்துப்பாக்கியுடன் எனது வீட்டுக்கு முன்னால் வந்த இரண்டு நபர்கள் எனது தலையில் துப்பாக்கியை வைத்து மிரட்டல் விடுத்தனர்.

தங்களுடைய பௌத்த கலாசாரத்தை அழிக்க முயல்வதாகவும், அன்றைய போராட்டத்தை நான் தான் தலைமை தாங்கி நடத்துவதாகவும், இனிவரும் காலங்களில் இந்த விடயங்களில் தலையிடக்கூடாது எனவும், அவ்வாறு தலையிட்டால் தாங்கள் என்னைச் சுடுவோம் என்றும் அவர்கள் மிரட்டினர்.

அவர்கள் வந்து மிரட்டல் விடுத்த வேளையில் எனது அம்மா வந்ததையடுத்து குறித்த நபர்கள் எனது வீட்டுக்கு முன்னால் உள்ள பற்றைக் காடுகள் ஊடாக 682 ஆவது படைப்பிரிவு முகாம் பக்கம் நோக்கி ஓடினார்கள்.

இவர்களுடைய நோக்கம் என்னைப் போன்ற செயற்பாட்டாளர்களை அடக்க முயற்சிப்பதாகும் - என்று குற்றஞ்சாட்டினார்.

## வெடிகுண்டுகளுடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மோட்டார் குண்டுகள் மற்றும் ஆர்.பி.ஜி. குண்டுகளில் இருந்து வெடிமருந்துகளைச் சேகரித்து டைனமற் தயாரிப்பவர்களுக்கு விற்பனை செய்யும் நோக்கில் குண்டுகளை மறைத்து வைத்திருந்த இருவரே விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டு மருதங்கேணிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வவுனியா வர்த்தகர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வயதுடைய அழகர்சாமி விஜயகுமார் என்ற நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (100)

## இலங்கை வருகின்றது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொருளாதார நெருக்கடிக்கு ஒத்துழைப்பு நல்குவது குறித்து இந்தத் தூதுக்குழு கூடுதல் கவனம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட உயர்மட்டத் தலைவர்களையும் இந்தத் தூதுக்குழுவினர் சந்தித்து முக்கிய பேச்சு நடத்துவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம்- 076 443 8622

இறைச்சிக் கோழி விற்பனை
புறொய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

இதோ வெளியாகிவிட்டது
செம்மண் 100வது இதழ்
பெற்றோல், டீசல் இன்றி பல துறைகள் முடக்கம்...
ஆஸிக்கு தப்ப முயற்சிப் போர் இரு மாதங்களில் அதிகரிப்பு.
டெங்கு தாக்கம் அதிகரிப்பு போதிய கவனம் வேண்டும்
அரச பணியாளர் வீட்டுத்தோட்டம் செய்தால் பட்டினி பறந்தோடுமா?
ஹேக்கிங் களவா ? கல்வியா ?
“கமல் சார் சொன்ன காரெக்டரில் இருந்துதான் விக்ரம் பிறந்தது”



ஐஸ்கிரீம்: குளிர்ச்சியா, சூடா?
பற்களைப் பராமரிப்போம்...
E - வண்டிகளால் சூழலுக்கு பாதிப்பு
சக்தி வள அரசியலால் இறுகிப்போன இலங்கை
மேலும் பல அரசியல், சமூக, பொருளாதார செய்திகளுடன்
செம்மண் 100வது இதழ்

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இந்தியாவின் முன்மாதிரி

**சிறுபான்மையினரை அடக்கி, ஒடுக்கி வரும் இலங்கையின் பௌத்த, சிங்களப் பேரினவாத ஆட்சிப் பீடங்களும் அவற்றுக்கு முண்டு கொடுத்து நிற்கும் தென்னிலங்கை மக்களும் நமது பக்கத்து தேசமான இந்தியாவிடம் படிக்க வேண்டிய பாடங்கள் பல உள்ளன.**

**அது, நாட்டின் பன்மைத்துவத்தை ஏற்று, பல்லின, பல்மொழி, பல்மத மக்கள் சமத்துவமாக வாழும் மதசார்பற்ற நாடு என்ற உயரிய பண்பியல்பை வெளிப்படுத்தி, அந்த நாட்டின் அனைத்து மக்களையும், சமயங்களையும், இனங்களையும் சம கௌரவத்துடன் மதித்து வாழ்வதாகும்.**

**ஆனால், பேரினவாத மமதையில் – திமிரில்– உன்மத்தத்தில் – மூழ்கிக் கிடக்கும் இலங்கையின் பௌத்த, சிங்களப் பேரினவாதம், உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியா ஐக்கியமாக, ஒரே நாடாகக் கட்டுண்டு எழுந்து நிற்பதன் மகத்துவத்தை – அதற்கான காரணத்தை – இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.**

**ஆளும் பாரதிய ஜனதா கட்சி இந்துத்துவா கொள்கை கொண்டது என்று விமர்சிக்கப்பட்டாலும், அதுவும்கூட மதம், மொழி, இனம் கடந்து ஐக்கியத்தை நிலைநிறுவதற்கு இடமளித்து நிற்பது கண்கூடு.**

**அந்த வரிசையில், அந்த நாட்டின் பூர்வீகக் குடியைச் சேர்ந்த ஒருவர் ஜனாதிபதியாக – அதுவும் பெண் ஜனாதிபதியாக – தெரிவு செய்யப்படுவதற்கு அந்த நாட்டின் ஆளும் தலைமை இடமளித்து முன்வந்திருக்கின்றது.**

**இந்தியாவின் முதல் பிரஜையாக – ஜனாதிபதியாக– ஏற்கனவே பிரதீபா பட்டேல் அம்மையார் 2007 முதல் இருந்திருக்கின்றார். இப்போது ஒடிசாவின் பூர்வீக குடியைச் சேர்ந்த திரௌபதி மூர்முவை (வயது 64) ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்திருக்கின்றது ஆளும் பாரதிய ஜனதா கட்சி. பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நேற்று முன்தினம் மாலையில் நடைபெற்ற கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஜார்க்கண்ட் ஆளுநராக இருந்த திரௌபதி மூர்மு அம்மையாரை ஆளும் தரப்பு வேட்பாளராக நிறுத்த முடிவு எட்டப்பட்டு அறிவிக்கப்பட்டது.**

**தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் கடந்த 15ஆம் திகதி தொடங்கி விட்டது. ஜுன் 29 கடைசி நாள். ஜுலை 2 ஆம் திகதி வரை வேட்புமனு திரும்பப் பெறும் நாள். ஜுலை 18 இல் தேர்தல். வாக்கு எண்ணும் பணி 21 ஆம் திகதி நடக்கும். தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் ஜுலை 24 இல் முடிவடையும். புதிய ஜனாதிபதி ஜுலை 25 பதவியேற்பார்.**

**இந்தத் தேர்தலில் காங்கிரஸ் உட்பட பிரதான எதிர்க் கட்சிகள் பாரதிய ஜனதா கட்சியின் முன்னாள் மத்திய அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹாகாவை தமது பொது ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தினாலும் சட்டசபையிலும், ராஜ்ய சபை மற்றும் லோகசபையிலும் அதிக ஆதரவு வாக்கு எண்ணிக்கை கொண்ட ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் வேட்பாளர் சுலபமாக வெல்லுவார் என்றே கணக்கிடப்படுகின்றது.**

**நாட்டின் எங்கோ ஒரு மாநிலத்தின் மூலையில் பூர்வீகக் குடிப் பெண்ணொருவரை நாட்டின் முதல் பிரஜையாக்கி மதிக்கும் உயரிய பண்பியல்புதான் இந்தியாவின் ஐக்கியத்துக்கும், வலிமைக்கும், ஒன்றுபட்ட எழுச்சிக்கும் ம் அடிப்படையான விழுமியமாக இன்றும் திகழ்கிறது.**

**அது இல்லாமல் பௌத்த, சிங்கள பேரினவாத ஆதிக்க ஆக்கிரமிப்பு திமிர் எப்போதும் தினவெடுத்துப் பீறிட்டுப் பாய்வதால்தான் இலங்கைத் தீவு எப்போதும் இரத்த ஆறு ஓடும் – தோற்றுப்போன – தேசமாகத் தடுமாறுகிறது.**

**இந்தியாவிடமிருந்து இந்த நாட்டின் பேரினவாதிகள் பாடம் கற்க வேண்டும்.**

## தனியார்துறை ஊழியர்கள், தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதாந்த சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுப்போம்

### மனுஷ உத்தரவாதம்



தனியார் துறை ஊழியர்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச மாதாந்த சம்பளம் அதிகரிக்கப்படும் என தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தனியார் துறை ஊழியர்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச சம்பளம் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப அதிகரிக்கப்படும் என்றும் அதற்குத் தேவையான சட்டம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

புதிய முதலீட்டாளர்களை அழைப்பதன் மூலம் உலகிற்கு ஏற்ற புதிய தொழில்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்றும் எனவே, வேலைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டத்தை முன்வைக்க விதிகள் மற்றும் விதிமுறைகளை மாற்ற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பெண்கள் மற்றும் ஆண்களைப் பாகுபடுத்தும் சட்டங்கள் திருத்தப்பட வேண்டும் மற்றும் பாலின சமநிலையை நிலைநாட்ட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். புதிய உலகை உருவாக்க தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தொழில் பயிற்சி வழங்க வேண்டும் என்று அமைச்சர் கூறினார்.

இந்த நாள்களில் தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்துவது மிகவும் கடினமாக உள்ளது என்பது அனைவருக்கும் தெரியும் என்றும் இது சந்தேகத்துக்கு இடமில்லாத உண்மை என்றும் அவர் கூறினார்.

உணவுச் செலவு சாதாரண மனிதனுக்கு எட்டாத அளவுக்குப் போய்விட்டது. எரிபொருளைப் பெறுவது மிகவும் கடினம். எனவே, தனியார் துறை ஊழியர்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதியத்தை அதிகரிப்பது தொடர்பாக நாங்கள் விவாதிப்போம் என்று அமைச்சர் கூறினார்.

அதன்படி, எதிர்காலத்தில் தனியார் துறை ஊழியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியத்தை அமைச்சகம் விதிக்கும் என்றும் அவர்களை மகிழ்விக்கும் வகையில் தற்போதைய குறைந்தபட்ச ஊதியத்தை ஒழுக்கமான தொகையாக உயர்த்தும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச சம்பளத்தை அதிகரிக்குமாறு பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே, அவர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான வழிவகைகள் தொடர்பாகக் கலந்துரையாட வேண்டும். அதற்காக அமைச்சு அர்ப்பணிப்புடன் செயற்படுவதுடன் அவர்களைப் பாதுகாப்பதற்கு தாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம் என்றும் அமைச்சர் மனுஷ நாணயக்கார மேலும் தெரிவித்தார்.

## உலக சாதனை நிகழ்த்திய இரண்டரை வயது சிறுவன்

கேகாலை மாவட்டம் தல்கஸ்பிடிய என்ற பகுதியைச் சேர்ந்த இரண்டரை வயதான நுஹான் நுஸ்கி எனும் சிறுவன் 19 வினாடிகளில் அனைத்து அரபு நாடுகளின் கொடிகளையும், பெயர்களையும் அடையாளம் கண்டு சர்வதேச சாதனை புத்தகத்தில் தனது பெயரைப் பதிவு செய்து உலக சாதனை படைத்து தனது பெற்றோர்களுக்கும், நாட்டுக்கும், பெருமை சேர்த்துள்ளார்.

அரபு நாடுகளின் கொடிகளையும், பெயர்களையும் அடையாளம் காணும் முதலாவது சிறுவன் எனும் உலக அந்தஸ்தைத் தன தாக்கிகொண்டார். ஏற்கனவே இதையே சாதனையாக நிகழ்த்தி ஆசிய சாதனை புத்தகத்தில் தன் பெயரை பதிவு செய்த இந்தச் சிறுவன் அண்மையில் உலக சாதனைக்கு விண்ணப்பித்ததுடன் இவரது திறமையை பரிசீலனை செய்து உலக சாதனை சிறுவனாக தமது இணையத்தளத்தில் வெளியிட்டதுடன் தற்போது இவருக்கான பரிசில்கள், பதக்கங்கள் என்பன வீடு வந்து சேர்ந்துள்ளன.

முஹம்மட் நுஸ்கி, பாத்திமா ரஸீனா ஆகிய தம்பதிகளின் செல்வப் புதல்வனான இந்தச் சிறுவன் இரண்டு வயதில் இந்த சாதனையை நிகழ்த்தி இருப்பதுடன் தனது ஊரில் இவ்வுலக சாதனை நிகழ்த்திய முதலாவது சிறுவனாக இருப்பது விசேட அம்சமாகும்.

மேலும் இந்தக் குழந்தை சென்ற வருடம் எ.எம்.ஆர் டோக் அமைபத்தின் மூலம் சிறந்த தேர்ச்சி மிக்க குழந்தை என தேசிய அளவில் தெரிவுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



எமது அதிபர் சங்கம் இலங்கையிலே அதிகமான தரம் பெற்ற அதிபர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட ஒரு தேசிய சங்கமாகும். இது தரம் பெற்ற அதிபர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதையும் அவர்களின் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதையும் தனது நோக்காகக் கொண்டு இயங்கும் ஒரு சங்கமாகவும் விளங்குகின்றது.

அந்தவகையில், வடமாகாணத்தில் எமது சங்கத்தின் அங்கத்தவர்களான சில அதிபர்களுக்கு (யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றியவர்களுக்கு) மாவட்டத்துக்கு வெளியில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக அறிகின்றோம்.

## 200 ஆவது ஆண்டில் கால்பதிக்கும் யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயம்!

யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் 200 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் கனகசிங்கம் மண்டபத்தில் இசை வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

பாடசாலையின் பழைய மாணவன் ரஜீவனின் இசையமைப்பில் உருவான '200 ஆவது ஆண்டு விழா நிறைவு கீதம்', புதுப்பொலிவுடன் இசையமைக்கப்பட்ட 'பாடசாலைக்கீதம்' என்பன வெளியீடு செய்து வைக்கப்படவுள்ளன.

பாடசாலையின் பழைய மாணவரும் யாழ் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ம.சத்தியகுமார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

மேலும் இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத்தின் நடனத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அருட்செல்வி கிருபைராஜா, சிறப்பு விருந்தினர்களாக பாடசாலையின் அதிபர் ந.பரமேஸ்வரன், இசைவாணர் மு.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
புதன்கிழமை 22.06.2022

### 60 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு

# வெள்ளத்தில் மிதக்கும் சீனா 12 பேர் பரிதாபகரமாக சாவு



சீனாவில் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழையின் எதிரொலியாக 6 மாகாணங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. சீனாவின் தெற்கு பகுதியில் 60 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கனமழை கொட்டித் தீர்த்தது. கடந்த 4 நாள்களில் விடாமல் பெய்த மிக பலத்த மழை மூணார் மாகாணத்தை புரட்டிப்போட்டு இருக்கிறது. தெற்கு சீனாவில் உள்ள ஆறுகள், கிளை நதிகள் அனைத்திலும் இரு கரைகளையும் தொட்டு வெள்ளம் ஓடுகிறது. பல இடங்களில் கரைகளில் உடைப்பு ஏற்பட்டதால் உய்குவாட் நகரத்திற்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

கரையோரத்தில் இருந்த வீடுகளை ஆற்று வெள்ளம் அடித்து சென்றது. ஊருக்குள் வெள்ளம் புகுந்ததில் நூற்றுக்கணக்கான வீடுகள் மூழ்கியுள்ளன. கரைபுரண்டோடும் வெள்ளத்தில் சாலைகள், பாலங்கள் மற்றும் ரயில் தண்டவாளங்கள் அடித்துச் செல்லப்பட்டன. இதனால் பல நகரங்களில் சாலை மற்றும் ரயில் போக்குவரத்து முடங்கியுள்ளது. மீட்பு பணியில் ஈடுபட சென்று கொண்டிருந்த தீயணைப்பு வாகனத்தையே வெள்ளம் இழுத்து சென்றதால் பரபரப்பு ஏற்பட்டது. கனமழை, வெள்ளத்தால் மூணார் உள்ளிட்ட சில மாகாணங்களில் நிலச்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன.

இதில் ஏராளமான வீடுகள் மண்ணோடு மண்ணாக புதைந்தன. கனமழைக்கு கடந்த 4 நாள்களில் மட்டும் 12 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், சுமார் 2 லட்சம் பேர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் எனவும் சீனா தெரிவித்துள்ளது. மீட்பு மற்றும் நிவாரண பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து தெற்கு சீனாவில் கனமழை தொடரும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால் தெற்கு மாகாண அரசுகள் பல்வேறு முன்னேற்பாடுகளை செய்து வருகின்றன.

## உக்ரைன் குழந்தைகளுக்கு உதவுவதற்கு நோபல் பரிசை விற்ற ரஷ்ய பத்திரிகையாளர்




உக்ரைனில் போரால் பாதிக்கப்பட்டு அகதிகளாக உள்ள குழந்தைகளுக்கு உதவ தான் வாங்கிய நோபல் பரிசை ரூ.808 கோடிக்கு ரஷ்ய பத்திரிகையாளர் விற்பனை செய்துள்ளார். ரஷ்யாவைச் சேர்ந்த டிமிட்ரி முரடோவ் (60) பத்திரிகையாளராக பணிபுரிந்து வருகிறார். இவருக்கு கடந்த 2021ம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. நோபல் பரிசுடன் வழங்கப்பட்ட ரூ.3.80 கோடியை மாஸ்கோவில் முதுகெலும்பு பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் மருத்துவ செலவுக்காக வழங்கினார்.

தற்போது, உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ள நிலையில், சுமார் 60 லட்சம் பேர் நாட்டை விட்டு அகதிகளாக வெளியேறி உள்ளனர். இதில் ஏராளமான குழந்தைகள் பெற்றோர்களை இழந்து உணவின்றி தவித்து வருகின்றனர். இவர்களுக்கு உணவு மற்றும் மருத்துவ செலவுக்காக டிமிட்ரி முரடோவ் நிதி திரட்டி வருகிறார். இதன் ஒரு பகுதியாக தன்னுடைய நோபல் பரிசை ஏலம் விட முடிவு செய்தார். அதன்படி, அமெரிக்காவின் நியூயோர்க் மாகாணத்தில் ஹெரிடேஜ் என்கிற நிறுவனத்தால் ஏலம் விடப்பட்டது. இது, ரூ.808 கோடிக்கு ஏலம் போனது. இத்தொகை முழுவதையும் உக்ரைனில் போரில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு வழங்குவதாக டிமிட்ரி முரடோவ் அறிவித்துள்ளார்.

### ஊழியர்கள் வேலைநிறுத்தம்;

## பிரிட்டனில் முடங்கின ரயில் சேவைகள்




ரயில்வே ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தால் பிரிட்டன் முழுவதும் ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளது. பன்மடங்கு அதிகரித்துவிட்ட செலவீனங்களை எதிர்கொள்ளும் விதமாக ஊதியத்தை 11% அளவுக்கு உயர்த்த வேண்டும் என்று பிரிட்டன் ரயில்வே ஊழியர்கள் அரசுக்கு தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதற்கு போரிஸ் ஜான்சன் அரசு தரப்பில் இருந்து உரிய விளக்கம் தரப்படாததை அடுத்து திங்கட்கிழமை முதல் பிரிட்டன் முழுவதும் ரயில்வே ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை தொடங்கி உள்ளனர். 50,000த்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணிபுறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். ரயில் நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

ரயில்கள் பனிமலைகளில் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. ரயில்வே ஊழியர்களின் போராட்டத்தால் பிரிட்டன் முழுவதும் ரயில் சேவை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத பாதிப்பை பிரிட்டன் ரயில்வே நிர்வாகம் எதிர்கொண்டுள்ளது.

ரயில்வே ஊழியர்களின் இந்த வேலை நிறுத்தம் தேவையில்லாத ஒன்று என பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் தெரிவித்துள்ளார். போராட்டத்தை கைவிட்டு பணிக்கு திரும்பினாள் பேச்சுக்கு அரசு தயார் என்று பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் அழைப்பு விடுத்துள்ளார்.



## ரூ.3.3 லட்சம் கோடிக்கு டுவிட்டரை விற்பதற்கு பங்குதாரர்கள் ஒப்புதல்

எலான் மஸ்க் கேட்டபடி ரூ.3.3 லட்சம் கோடிக்கு டுவிட்டர் நிறுவனத்தை விற்க அதன் பங்குதாரர்கள் ஒருமனதாக ஒப்புதல் அளித்துள்ளனர். அமெரிக்காவின் டெஸ்லா நிறுவன தலைவர் எலான் மஸ்க், சமீபத்தில் டுவிட்டர் நிறுவனத்தை ரூ.3.3 லட்சம் கோடியில் வாங்க விருப்பம் தெரிவித்தார்.

இதற்கு டுவிட்டர் நிர்வாகம் ஒப்புக் கொண்டது. ஆனாலும், டுவிட்டரை வாங்குவதில் மஸ்க் 3 முக்கிய சந்தேகத்தை எழுப்பினார். டுவிட்டரில் 5%க்கும் குறைவான போலி கணக்குகளே உள்ளன என்பதை நிர்வாகம் நிரூபிக்க வேண்டும், பங்குதாரர்களின் ஒப்புதலை பெற வேண்டும், கடன் விவரங்களை முழுமையாக தெரிவிக்க வேண்டும் என கேட்டிருந்தார். இவை தான் தீர்க்கப்படாத விடயங்கள். இந்நிலையில், மஸ்க் கேட்டபடி ரூ.3.3 லட்சம் கோடியில் டுவிட்டரை விற்க அதன் பங்குதாரர்கள் ஒருமனதாக நேற்று ஒப்புதல் தெரிவித்தனர். இதன் மூலம், மஸ்க்கின் ஒரு கோரிக்கை நிறைவேறி உள்ளது. அதே சமயம், மஸ்க் மாறி மாறி பேசி வருகின்றமையால் டுவிட்டரின் பங்குகள் தொடர்ந்து சரிகின்றன. தற்போது, மஸ்க் கேட்ட தொகையை விட மிகக் குறைவான விலையில் டுவிட்டர் பங்குகள் இருப்பதால் இந்த விற்பனை நடக்குமா என்பது இன்னும் சந்தேகமாகவே உள்ளது.

## கம்போடியாவில் பிடிபட்டது 300 கிலோ திருக்கை மீன்

உலகிலேயே மிக அதிக எடை கொண்ட திருக்கைவால் மீன் கம்போடியாவில் பிடிபட்டுள்ளது. அந்நாட்டில் பாயும் மேகோங் (Mekong) ஆற்றில் பிடிபட்ட மிகப்பெரிய திருக்கைவால் மீனைப் பிடித்த மீனவர்கள் வியந்து போயினர். அதை எடைபோட்ட போது, நம்ப முடியாத அளவுக்கு 300 கிலோ இருந்தது. நீளத்தை அளந்தபோது, 13 அடி இருந்தது. திருக்கை வால் மீன் இவ்வளவு எடையில் இருப்பது இதுவே முதல்முறை என்று மீன்கள் குறித்த ஆய்வாளர்கள் வியப்புடன் கூறுகின்றனர்.

2005 ஆம் ஆண்டு 293 கிலோ எடையுடன் பிடிபட்ட திருக்கை வால் மீன்தான் உலகிலேயே அதிக எடை கொண்டது என்ற பெருமையைப் பெற்றிருந்தது. தற்போது கம்போடியாவில் சிக்கியுள்ள இந்த திருக்கை வால் மீன், தாய்லாந்து மீனின் சாதனையை முறியடித்துள்ளது. கம்போடியாவில் மேகோங் ஆற்றில் கிடைத்துள்ள இந்த மீனை, அந்நாட்டு மீனவர்கள் 'மேகோங் அதிசயம்' என்று கொண்டாடுகின்றனர். பௌர்ணமியன்று இந்த மீன் பிடிக்கப்பட்டதால் உள்ளூர்வாசிகள் இந்த மீனிற்கு 'போராமி' என்று செல்லப்பெயர் சூட்டினர். போராமி என்றால் முழு நிலவு அர்த்தம் என்று அந்நாட்டு மக்கள் கூறுகின்றனர்.

# எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் அமைச்சர் யஷ்வந்த் சின்ஹா அறிவிப்பு


குடியரசுத் தலைவர் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக யஷ்வந்த சின்ஹா அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தின் பதவிக் காலம் முடிவதையொட்டி ஜூலை 18 ஆம் திகதி குடியரசுத் தலைவர் தேர்தல் நடக்கவிருக்கிறது.

எதிர்க்கட்சிகள் சார்பில் பொது வேட்பாளரை நிறுத்துவது குறித்து கடந்த சில தினங்களாக டெல்லியில் ஆலோசனை நடத்தப்பட்டது. தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத் பவார், ஜம்மு-காஷ்மீர் முன்னாள் முதலமைச்சரும், தேசிய மாநாட்டு கட்சித் தலைவருமான பரூக் அப்துல்லா, மகாத்மா காந்தியின் பேரனான கோபாலகிருஷ்ண காந்தி உள்ளிட்டோரிடம் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் அவர்கள் போட்டியிட மறுத்துவிட்டனர்.

இந்த நிலையில் குடியரசுத் தலைவர் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக முன்னாள் அமைச்சர் யஷ்வந்த சின்ஹா அறிவிக்கப்பட்டுள்ளார். டெல்லியில் சரத்பவார் தலைமையிலான எதிர்க்கட்சிகள் ஆலோசனை கூட்டத்தில் ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது. ஐ.ஏ.எஸ். அதிகாரியான யஷ்வந்த் சின்ஹா வெளியுறவுத்துறை மற்றும் நிதி அமைச்சராக இருந்தவர். வருகின்ற ஜூன் 27 ஆம் திகதி அவர் தன்னுடைய வேட்பு மனுவைத் தாக்கல் செய்செய்யவிருக்கிறார் என தெரிவிக்கப்படுகிறது.





## மிக உயரமான படேல் சிலைக்கு அருகே குஜராத்தில் நேற்று இரவு நிலநடுக்கம்

குஜராத்தில் ஒற்றுமையின் சிலை எனக் அழைக்கப்படும் வல்லபாய் படேல் சிலைக்கு அருகே 3.1 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

குஜராத்தின் நர்மதா மாவட்டத்தின் கெவாடியா கிராமத்தில் படேல் சிலை நிறுவப்பட்டுள்ளது. 182 மீற்றர் உயரமுள்ள இந்தச் சிலைக்கு அருகே நேற்றிரவு நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் வீரியம் ரிச்டர் அளவுகோலில் 3.1 ஆக பதிவானது. இந்த நிலநடுக்கத்தின் மையம் கெவாடியா கிராமத்திற்கு தென்கிழக்கே 12 கி.மீ. தொலைவில் இருந்ததாக காந்திநகரை தளமாகக் கொண்ட நிலநடுக்க ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் அப்பகுதியில் உயிர்ச்சேதமோ, பொருள் சேதமோ ஏற்பட்டதாக எந்த தகவலும் இல்லை என்று மாவட்ட நிர்வாக அதிகாரிகள் தெரிவித்தனர். சக்தி வாய்ந்த நிலநடுக்கம் மற்றும் சூறாவளிகளைத் தாங்கும் வகையில் கட்டப்பட்டுள்ள ஒற்றுமைச் சிலைக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை என்று நினைவுச்சின்னத்தின் மக்கள் தொடர்பு அதிகாரி ராகுல் படேல் அறிவித்துள்ளார்.

## பா.ஜ.க. கூட்டணியின் குடியரசுத் தலைவர் வேட்பாளராக ஜார்க்கண்ட் முன்னாள் ஆளுநர் திரௌபதி முர்மு தெரிவு

தேசிய ஜனநயகக் கூட்டணியின் குடியரசுத் தலைவர் வேட்பாளராக திரௌபதி முர்முஅறிவிக்கப்பட்டுள்ளார்.

நாட்டின் கிழக்குப் பகுதியைச் சேர்ந்தவர் ஒருவர் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும், மேலும் அவர் ஒரு பெண்ணாக இருக்கவேண்டும் என்றும் அவர் பழங்குடியினத்தைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும் என்றும் பா.ஜ.க. நாடாளுமன்றக் குழுவிலே பேசி விவாதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தற்போது இவை அனைத்திற்கும் பொருத்தமான திரௌபதி முர்முவை வேட்பாளராக பா.ஜ.க மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி அறிவித்துள்ளது.



ஒடிசாவைச் சேர்ந்த திரௌபதி முர்மு, ஜார்க்கண்ட் மாநிலத்தின் முன்னாள் ஆளுநர் ஆவார். முன்னதாக எதிர்க்கட்சிகளின் குடியரசுத் தலைவர் வேட்பாளராக யஷ்வந்த சின்ஹா அறிவிக்கப்பட்டிருந்தார். தற்போது பா.ஜ.கவும் தனது வேட்பாளரை அறிவித்திருக்கிறது. இதில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு திரௌபதி முர்முவுக்கு இருப்பதாக கூறப்படுகிறது.

குடியரசுத் தலைவர் வேட்பாளர் பெயர்ப்பட்டியலில் துணை குடியரசுத் தலைவர் வெங்கையா நாயுடுவின் பெயரும் சொல்லப்பட்ட நிலையில் இன்று அவருடனும் ஆலோசனை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதேபோல துணை குடியரசுத் தலைவராக மீண்டும் வெங்கையா நாயுடுவையே தேர்ந்தெடுப்பது தொடர்பான ஆலோசனைகளும் நடைபெறுவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

## தொடரும் அக்னிபாத் எதிர்ப்புப் போராட்டங்கள்; முப்படைத் தளபதிகளை சந்தித்தார் பிரதமர் மோடி

இராணுவத்தில் 4 ஆண்டுகள் மட்டும் இளைஞர்களை பணியமர்த்தும் அக்னிபாத் திட்டத்துக்கு இந்தியா முழுவதும் எதிர்ப்பு வலுத்து வருகின்றது. வழக்கமான இராணுவ வீரர்களுக்கு கிடைக்கும் பணிக்கொடை, ஓய்வூதியம் உள்ளிட்ட எந்தவித சலுகைகளும் இந்த திட்டத்தின் கீழ் சேரும் அக்னி வீரர்களுக்கு கிடைக்காது என்பதால் நாட்டின் பல்வேறு மாநிலங்களில் இளைஞர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். இதில் பல இடங்களில் வன்முறைச் சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன.

ரயில்கள், பேருந்துகள் உள்ளிட்ட பொதுச் சொத்துகள் தீயிட்டு கொளுத்தப்படுவதால் பெரும் பதற்றம் நிலவி வருகிறது. அக்னி வீரர்களுக்கு எதிர்காலத்தில் பல வேலைகளில் முன்னுரிமை அளிக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ள போதிலும், போராட்டம் தொடர்கிறது. இந்த நிலையில், தரைப்படை, விமானப்படை, கடற்படை ஆகிய முப்படைகளின் தளபதிகளையும் பிரதமர் நரேந்திர மோடி இன்று சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார். அதன்படி, முப்படைத் தளபதிகளும் இன்று காலை தனித்தனியாக பிரதமரை சந்தித்துள்ளனர்.

இந்த சந்திப்பின் போது போராட்டங்களின் தற்போதைய நிலைவரம், போராட்டம் நடத்தும் இளைஞர்களை சமாதானப் படுத்துவது உள்ளிட்ட அம்சங்கள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டதாக பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.





## அசாம் பறந்தனர் சிவசேனா அதிருப்தி எம்.எல்.ஏக்கள் உத்தவ் தாக்கரே ஆட்சியைத் தக்கவைப்பது சந்தேகம்

மகாராஷ்டிராவில் காங்கிரஸ் மற்றும் தேசியவாத காங்கிரஸ் கட்சிகளுடன் கூட்டணி அமைத்து சிவசேனா ஆட்சி நடத்தி வருகிறது. இந்நிலையில், அண்மையில் அங்கு நடந்த மாநிலங்களவைத் தேர்தலில் 10 இடங்களில் 5 இடங்களை பா.ஜ.க. கைப்பற்றியது. 4 இடங்களில் மட்டுமே வெற்றி பெற பா.ஜ.கவுக்கு எம்.எல்.ஏக்கள் பலம் இருந்த சூழலில், சுயேச்சைகள், பிறகட்சிஎம்.எல்.ஏக்கள் எனசுமார் 23 பேர் பா.ஜ.கவுக்கு ஆதரவாக வாக்களித்ததால் அக்கட்சி 5 ஆவது இடத்திலும் வெற்றி பெற்றது.

பா.ஜ.கவுக்கு ஆதரவளித்தவர்களில் 12 க்கும் மேற்பட்ட எம்.எல்.ஏக்கள் ஆளும் சிவசேனாவை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்தது. இந்த அதிர்ச்சியில் இருந்து சிவசேனா மீள்வதற்குள்ளாகவே, அக்கட்சியைச் சேர்ந்த 30 எம்.எல்.ஏக்கள் அமைச்சர் ஏக்நாத் ஷிண்டேவுடன் நேற்று திடீரென மாயமாகினர். அவர்கள் பா.ஜ.க. ஆளும் குஜராத்தில் உள்ள நட்சத்திர விடுதியில் தங்க வைக்கப்பட்டிருக்கின்றமை பின்னர் தெரிந்தது. அவர்களைத் தொடர்புகொள்ள சிவசேனா கட்சியினர் எவ்வளவு முயற்சி செய்தும் அது பலனளிக்கவில்லை.

இந்த நிலையில், அந்த எம்.எல்.ஏக்கள் அனைவரும் நேற்று இரவு விமானம் மூலம் அசாமின் குவாஹாட்டி நகருக்கு சென்றனர். அங்குள்ள ஒரு நட்சத்திர விடுதியில் அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். குவாஹாட்டியில் செய்தியாளர்களை சந்தித்த சிவசேனாவின் ஏக்நாத் ஷிண்டே, 44 எம்.எல்.ஏக்கள் எங்களுடன் இருக்கிறார்கள். இதுதவிர 7 சுயேச்சைஎம்.எல்.ஏக்களும் எங்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். எங்கள் கோரிக்கையை மகாராஷ்டிரா முதல்வர் உத்தவ் தாக்கரேவிடம் தெரிவித்து விட்டோம். இனி முடிவெடுப்பது அவரது கையில்தான் உள்ளது, என்று தெரிவித்திருக்கிறார்கள்.

பா.ஜ.கவுடன் சிவசேனா கூட்டணி அமைத்து ஆட்சி நடத்தவேண்டும் என்பதே இந்த அதிருப்திஎம்.எல்.ஏக்கள் விடுக்கும் கோரிக்கையாக உள்ளது என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு சிவசேனா ஒத்துழைக்காவிட்டால், ஆட்சியை கவிழ்க்கும் முடிவில் அவர்கள் இருக்கிறார்கள் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# மட்டக்களப்பில் ரூ.15 லட்சம் லஞ்சம் வாங்கிய இருவர் நேற்றுக் கையும் மெய்யுமாகச் சிக்கினர்

## ஒருவர் அமைச்சர் வியாழேந்திரனின் சகோதரராம்

மட்டக்களப்பு வந்தாறு மூலைப்பகுதியிலுள்ள காணி ஒன்றின் அனுமதியை பெறுவதற்கு அதன் உரிமை யாளரிடம் 15 லட்சம் ரூபா லஞ்சமாக வாங்கினார் எனத் தெரிவித்து முன்னாள் இரா ஜாங்க அமைச்சர் எஸ்.வியா ழேந்திரனின் சகோதரர் மற் றும் மட்டக்களப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் என இரு வரை நேற்று செவ்வாய்க் கிழமை மட்டக்களப்பு ஹோட்டல் ஒன்றில் வைத்து கைது செய் துள்ளோம் என இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினர் தெரிவித்தனர்.



வந்தாறு மூலை பிரதேசத் தில் கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் காத்தான்குடியைச் சேர்ந்த ஒருவரின் காணி பிரித்துவிற்பனைசெய்யப்பட்டு, அதில் மக்கள் குடியேறியுள்ள னர். இந்தக் காணியைவாங்கிய மக்கள் பிரதேச சபையில் வீடு கட்டுவதற்கான அனுமதியை பெறுவதற்கு சென்றால் அங்கு கடமையாற்றிவரும் அபிவி ருத்தி உத்தியோகத்தரும் முன் னாள் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் சகோ தரரும் அவர்களிடம் இந்தக் காணிபோலியெனகூறி அனுமதி வழங்க முடியாது எனத் தெரி வித்துள்ளனர் என்று கூறப் படுகின்றது.

இந்த நிலையில் காணி விற் பனை செய்த காத்தான்குடியை சேர்ந்தவரிடம் காணியை வாங் கிய மக்கள் சென்று இந்தக் காணி உறுதி போலியானது என அனுமதி வழங்க முடியாது என சம்பந்தப்பட்ட அரச அலு வலர் தெரிவித்தார் எனத் தெரி யப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்துக் காணியை விற்பனை செய்தவர் அமைச்ச ரின் சகோதரரிடம் குறித்த காணியைசட்டரீதியாகநாங்கள் காத்தான்குடியைச் சேர்ந்த ஒரு வரிடம் வாங்கி, எமது பதிவு செய் யப்பட்ட கம்பனி ஊடாக இதனை சிறு சிறு பகுதிகளாக விற்பனை செய்துவருகின்றோம் எனத் தெரிவித்த நிலையில் அமைச் சரின் சகோதரரும், அபிவிருத்தி உத்தியோகத்தரும் இணைந்து பிரதேச சபையில் அனுமதி வழங்க 20 லட்சம் ரூபா லஞ்ச மாக வழங்குமாறு அவரிடம் கோரியுள்ளனர்.

இவ்வாறான நிலையில் குறித்த காணியை விற்பனை செய்த காத்தான்குடியைச் சேர்ந்த நபர் கொழும்பில் உள்ள இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவுடன் தொடர்பு கொண்டு அறிவித்ததன் பிரகாரம் அவர் களின் ஆலோசனையின்படி சம்பவதினமான நேற்று மாலை 6.30 மணிக்கு இலஞ்சம் கோரி யவர்களிடம் கோரிய தொகை யில் 15 லட்சம் ரூபா பணத்தைத் தருவார்கள் எனவும் அதனைப் பெறுவதற்கு மட்டக்களப்பு நகர்ப்பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றிற்கு வருமாறும் தெரிவித் தனர். அதன்படி அந்த ஹோட்ட லுக்குச் சென்று அந்த 15 லட்சம் ரூபா பணத்தை அமைச்சரின் சகோதரரும் அபிவிருத்தி உத்தி யோகத்தரும் இணைந்து காணி உரிமையாளரிடம் பெற்று அத னை சரிபார்த்துக் கொண்டிருந் தனர்.

இதன்போது அங்கு மாறு வேடத்தில் இருந்த லஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவினர் சுற்றிவ ளைத்து இருவரையும் கைது செய்தமையுடன் லஞ்சமாகப் பெற்ற பணத்தை மீட்டு மட்டு தலைமையக பொலிஸ் நிலை யத்துக்கு கொண்டு சென்று மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.



# பச்சை வெள்ளரி அறுவடையில் பங்குபற்றிய கிழக்கு ஆளுநர்

விவசாய அமைச்சின் கீழ் கண்காணிக்கப்படும் விவசாய நல புத்தாக்கத் திட்டத்தின் மூலம் வாகரையில் நடைபெற்று வரும் விவசாய நிலங்களை பார்வையிடும் நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கலந்து கொண்டார்.

இவ்விவசாய நிலங்களில் உப விளைபொருளாக உயர்தர மானிக்காய்ரகங்கள்பயிரிடப்பட்டிருந்தன.அவற்றின்அறுவடையின் தரத்தையும் கிழக்கு மாகாண ஆளுநர் பார்வையிட்டார்.

தோட்டங்களை பார்வையிட்ட ஆளுநர், மாங்கேணி பிரதேசத்தில் ஹேலிஸ் நிறுவனத்தினால் நிறுவப்பட்டுள்ள பச்சை வெள்ளரி ஏற்றுமதி பதப்படுத்தும் தொழிற்சாலையையும் பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.ஜி.கே.முத்துபண்டா, மாகாண விவசாயப் பணிப்பாளர் கலாநிதி எம்.ஹுசைன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# முன்பள்ளி மாணவனுக்கு இருக்கும் அறிவு கூட இல்லாதவரே ஜனாதிபதி

## காரைதீவில் கஜதீபன் காட்டம்

(காரைதீவு நிருபர் சகா)

ஒரு முன்பள்ளி மாணவருக்கு இருக்கின்ற அறிவு, ஆற்றல் இல்லாத ஜனாதிபதியை நாட்டு மக்கள் தெரிவு செய்திருக்கிறார்கள். அதன்விளைவைஅனைத்துமக்களும்இன்றுஅனுபவிக்கிறார்கள். இந்த கடினமான காலகட்டத்தை மிகுந்த தன்னம்பிக்கையோடு கடக்கவேண்டும்.

- இவ்வாறு காரைதீவில் உரையாற்றிய முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் தெரிவித்தார்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் முன்னாள் தளபதி அமரர் மகாதேவன் சிவநேசனின் ஓராண்டு ஞாபகார்த்தமாக அண்மையில் காரைதீவு விபுலானந்த மைதானத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார் .

அவர் மேலும் கூறுகையில் –

இன்றைய இளைஞர்கள் விளையாடுவதற்கு நேரமில்லாமல் பெற்றோலுக்கும் டீசலுக்கும் வரிசையில் நிற்கும் துயரங்களை பார்க்கிறோம். மகிழ்ச்சியாக திரிய வேண்டிய நேரத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் வதை அனுபவிப்பதை காண்கிறோம். தமிழ் இனம் இந்த நாட்டிலே பல நெருக்கடிகளை, பல சவால்களை இந்த கண்டு வந்திருக்கிறது. எதையும் தாங்கிய இதயம் படைத்தவர்கள் தமிழர்கள் .

அந்த வகையில் இன்றைய பொருளாதார நெருக்கடி தமிழர்களுக்கு ஒரு சவால் அல்ல. இந்த நெருக்கடி நிலை நாளை மாறலாம் அல்லது அது உச்சக்கட்டத்தை அடையலாம். எதுவானா லும், எமக்கு நம்பிக்கை தேவை.

ஒரு காலத்தில் இந்தியாவும் சுதந்திரம் பெறுவதற்காக மகாத்மா காந்தி தலைமையில் அகிம்சை போராட்டத்தை நடத்தியது. புதிய உலக ஒழுங்குக்கு ஏற்ப இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. காந்தியின் அகிம்சைப் போராட்டத்துக்கு அப்பால் கால ஒழுங்கினால் அந்த சுதந்திரம் வழங்கப்பட்டது .

அதன் ஒரு பகுதியாகவே இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது ஆனால் தமிழர்கள் எமக்கு இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லை.

நாட்டை விற்று உணவு வழங்க வேண்டிய கேவலமான நிலையில் அரசு இருக்கின்றது. இந்த கடினமான காலத்தை நாம் நம்பிக்கையோடு கடக்க வேண்டும் .

நாம் உச்சக்கட்ட பொருளாதார நெருக்கடிகளை கடந்த காலங்களில் சந்தித்தவர்கள். நம்பிக்கையோடு பீனிக்ஸ் பறவை போல் நாம் மீண்டும் எழ வேண்டும். இன்றைய பொருளாதார நெருக்கடியை விட எத்தனையோ சவால்களை சந்தித்தது தமிழினம். நிலைமையை சமாளித்து கொண்டு எதையும் தாங்கிக் கொண்டு முன்னேற வேண்டும்.

வடக்குக்கும் கிழக்குக்கும் உறவுப்பாலம் அமைத்தவர் இந்த மண்ணில் பிறந்த தமிழ்ப் பேராசிரியர் விபுலானந்த அடிகள். அவர்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலே கற்பித்த போது எனது அப்பாவும் தாத்தாவும் அவரிடம் தமிழ் படித்தவர்கள். யாழ் மக்கள் தமிழை உச்சரிப்பதற்கும் தமிழை செம்மையாக பேசுவதற்கும் வழி வகுத்தவர் சுவாமி விபுலானந்த அடிகள். அவர் பிறந்த மண்ணிலே நின்று பேசுவதில் பெருமையடைகிறோம்.- என்றார்.







# குடும்ப வன்முறைகள், பரிகாரம்; கந்தளாயில் விசேட செயலமர்வு

(ஹஸ்பார்)

கிழக்கு ஐக்கிய பெண்கள் அமைப்பினால் குடும்பவன்முறை மற்றும் பரிகாரம் தொடர்பிலான செயலமர்வு நேற்று கந்தளாய் சம்பத் ஹோட்டலில் நடைபெற்றது.

தற்போதைய சூழ்நிலையில் குடும்ப வன்முறை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்துள்ள தாகவும் இவற்றிலிருந்து சமூகத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் காணப்படுவ தாகவும் இதன்போது வளவாளராகக் கலந்து கொண்ட கந்தளாய் பொலிஸ் நிலைய முதலுதவிப் பிரிவுக்கான பொலிஸ் உத்தியோகத்தர் சுதர்சன தெரிவித்தார்.

பெண்கள் குடும்பத்தில் மேற்கொள்ள வேண் டிய செயற்பாடுகள், பிள்ளைகளை பராமரித்து பாதுகாப்பதன் அவசியம், ஸ்மார்ட் தொலைபேசி பாவனையின் விபரீதங்கள்,போதைப்பொருள் பாவனையின் சீர்கேடுகள், சட்ட ஏற்பாடுகள் உள்ளிட்ட பல விடயங்கள் இதன்போது தெளிவு டுத்தப்பட்டன. இந் நிகழ்வில் பொலிஸ் உத்தியோ கத்தர்கள் வளவாளர்களாகப் பங்குபற்றினர். கந்தளாய் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சமூக மட்ட பெண் செயற்பாட்டாளர்களும் இதில் கலந்து கொண்டனர்.

# ரணிலிடமிருந்து விலகிய எமக்கு மீண்டும் அவரை பிரதமராக ஜனாதிபதியிடம் பரிந்துரைக்க வேண்டிய தேவை கிடையாது

## விமலின் கூற்றுக்கு மஹிந்த அமரவீர பதிலடி



நல்லாட்சி அரசாங்கத்தில் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து விலகிய எமக்கு மீண்டும் அவரை பிரதமராக நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் பரிந்துரைக்க வேண்டிய தேவை கிடையாது.

விமல் வீரவன்ஸ குறிப்பிட்ட விடயம் அடிப்படையற்றதுஎன்பதைபொறுப்புடன் குறிப்பிட்டுக் கொள்கிறேன் என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர சபையில் தெரிவித்தார்..

இதன்போது குறுக்கிட்ட விமல் வீரவன்ஸ எம்.பி.,ஜனாதிபதி குறிப்பிட்டதையே நான் குறிப்பிட்டேன், இந்த விடயம் பொய்யானதாயின் ஜனாதிபதியே பொய்யுரைத்துள்ளார்.ஆகவே நீங்கள் உங்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் அதனை கேட்டுக்கொள்ளுங்கள் எனக் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற கூட்டத்தொடரின் போது விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர சிறப்பு கூற்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு இரு தரப்பு வாதங்கள் இடம்பெற்றன.

விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தொடர்ந்து கூறுகையில் –

அரசாங்கத்தில் அமைச்சு பதவிகளை பெற்றுக்கொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் குறிப்பிட்டார் என விமல் வீரவன்ஸ குறிப்பிட்டுள்ளமை அடிப்படையற்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் இருந்து வெளியேறி நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்பட தீர்மானித்ததைத் தொடர்ந்து சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்க பல்வேறு தரப்பினருடன் பேச்சுக்களை மேற்கொண்டோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் எதிர்க்கட்சியினருடன் பல முறை பேச்சுகளை மேற்கொண்டு பிரதமர் பதவியைப் பொறுப்பேற்குமாறு பலமுறை எதிர்க்கட்சித் தலைவரிடம் வலியுறுத்தினோம்.

பிரதமர் பதவியைப் பொறுப்பேற்குமாறு பலமுறை விடுத்த கோரிக்கையை எதிர்க்கட்சித் தலைவர் நிபந்தனைகளின் அடிப்படையில் புறக்கணித்தார்.

இவ்வாறான நிலையில் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமிக்குமாறு நாங்கள் ஜனாதிபதியிடம் குறிப்பிட்டோம் என விமல் வீரவன்ஸ குறிப்பிட்டமை அடிப்படையற்றது என்பதைப் பொறுப்புடன் குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

இதன்போது ஒழுங்கு பிரச்சினையை எழுப்பிய விமல் வீரவன்ஸ, ஜனாதிபதி எம்மிடம் குறிப்பிட்டதையே நான் குறிப்பிட்டேன் அவ்வாறாயின் அவர் பொய்யுரைத்திருக்கலாம்.

அதனை அவரிடம் கேளுங்கள் உங்களின் பெயர் (மஹிந்த அமரவீர) நிமல் சிறிபால டி சில்வா ஆகியோரின் பெயர்களை குறிப்பிட்டார்.

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமியுங்கள் என இவர்கள் தொடர்ந்து குறிப்பிடுகிறார்கள் என ஜனாதிபதி தான் குறிப்பிட்டார். இந்த விடயம் பொய்யாயின் பொய்யுரைத்தது நான் அல்லர் உங்கள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ–என்றார்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியிடம் வினவினோம். ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் பிரதி தலைவர் நிமல் சிறிபால டி சில்வாவை பிரதமராக நியமிக்குமாறு தாம் ஜனாதிபதியிடம் குறிப்பிட்டோம்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைந்து செயற்பட முடியாது என்ற காரணத்தால் தான் 2018 ஆம் ஆண்டு தேசிய அரசாங்கத்தில் இருந்த வெளியேறினேன். பின்னர் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்து பிரச்சினைகள் தீவிரமடைந்தன.

ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து வெளியேறிய எமக்கு மீண்டும் அவரை பிரதமராக நியமிக்க வேண்டிய தேவை கிடையாது.

நாங்கள் எந்நிலையிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிக்கும் யோசனையை முன்வைக்கவில்லை. பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவி பிரமாணம் செய்யும்வரை அதனை நாங்கள் அறிந்திருக்கவில்லை ஆகவே பொய்யுரைக்க வேண்டாம். பல முறை பொய்யுரைப்பது உண்மையாகிவிடாது. இதன்போதும் மீண்டும் ஒழுங்கு பிரச்சினையை எழுப்பிய விமல் வீரவன்ஸ, நிமல் சிறிபால டி சில்வா பிரதமர் பதவிக்கு ரணில் விக்கிரமசிங்கவின் பெயரை பரிந்துரைக்கவில்லை என்பதை உங்களால் குறிப்பிட முடியுமா என மஹிந்த அமரவீரவை நோக்கி வினவினார்.

இதற்கு பதிலளித்த மஹிந்த அமரவீர நான் இருக்கும் போது அவர் அவ்வாறு குறிப்பிடப்பட வில்லை என்றார்.நீங்கள் காலையில் குறிப்பிடுவதை மாலையில் இல்லை என்று குறிப்பிடுவீர்கள் என்றார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முறையான தீர்மானத்திற்கமையவா நீங்கள் அமைச்சுப்பதவியை பொறுப்பேற்றீர்கள் என விமல் வீரவன்ஸ மஹிந்த அமரவீரவிடம் வினவினார்.

எமது கட்சியை பிளவுபடுத்த இவ்வாறானவர்கள் உள்ளார்கள்.இவர்கள் கடந்த காலங்களில் கட்சியையும், அரசாங்கத்தையும் பிளவுபடுத்தினார்கள்.

சர்வதேசத்தை பகைத்துக்கொள்ளும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் காரியாலயம் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டார்கள் என மஹிந்த அமரவீர குறிப்பிட்டார்.

இதன்போது உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிக்குமாறு பரிந்துரை செய்தது யார்? ஓர் ஆசனத்தில் நாடாளுமன்றம் வந்த ரணில் விக்கிரமசிங்க எவ்வாறு பிரதமராக நியமிக்கப்பட்டார் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். என்றார்.

# நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் நாடு அராஜக நிலைக்குச் செல்லும்!

## எதிர்க்கட்சிகளிடம் பந்துல கோரிக்கை



நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் நாடு அராஜக நிலைமைக்கு தள்ளப்படும். அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் அன்றாட வாழ்வை எவ் வாறு முன்னெடுத்துச் செல்வது என்ற சிக்கல் காணப்படுகிறது.

எனவே, தேர்தல் தொடர்பில் ஆழமாகச்சிந்தித்து கருத்துக்களை வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறேன் என அமைச்சவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இடைக்கால அரசாங்கத்தால் நாட்டில் தற்போதுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது என்பதால் தேர்தலை நடத்துமாறு எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இது தொடர்பில் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வினவிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய நிலைமையில் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசாங்கத்தால் இரு முறைமைகளைப் பின்பற்ற முடியும். அதற்கமைய நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு யோசனையொன்றை முன்வைத்து அதனை நிறைவேற்றினால் நாடாளுமன்றத்தை கலைக்க முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் இதனைத் தெரிவித்துள்ளார். அவரால் அந்த யோசனையை நிறைவேற்றிக்கொள்ள முடியும் எனில் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும்.

அல்லது அரசாங்கம் அமைக்கப்பட்டு இரண்டரை ஆண்டுகள் நிறைவடைந்ததன் பின்னர் ஜனாதிபதியால் நாடாளுமன்றதைக் கலைக்க முடியும்.

எவ்வாறிருப்பினும் நாடாளுமன்றத்தைக் கலைப்பதால் நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது? வெளிநாட்டுக் கடன்களை எவ்வாறு மீளச் செலுத்துவது? நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு நாடு அராஜக நிலைமைக்கு தள்ளப்பட்டால் அன்றாட வாழ்வை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது என்ற சிக்கல் காணப்படுகிறது.

எனவே இவை தொடர்பில் ஆழமாகச் சிந்தித்து கருத்துக்களை வெளியிடுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# மத்திய வங்கியின் ஆளுநராக தொடர்ந்தும் நந்தலாலே!

## ஜனாதிபதி திட்டவட்டக் கருத்து



இலங்கைமத்தியவங்கியின் ஆளுநராக கலாநிதி நந்தலால் வீரசிங்கவே தொடர்ந்தும் பதவி வகிப்பார் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் அவர் இந்த விடயம் குறித்து தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் ஆளுநராக நந்தலால் வீரசிங்கவை நீடிக்குமாறு அரசாங்கத்தின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

### இலங்கைக்கு எதிராக

# பிணைமுறிக்கான கட்டணம் செலுத்தாமையால் அமெரிக்க நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

பிணை முறிக்கான கட்டணங்களை செலுத்தாமையால் இலங்கைக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றத்தில் வங்கியொன்று வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

பொருளாதாரவீழ்ச்சியைத் தடுப்பதற்காக இலங்கை முதல் தடவை தனது வெளிநாட்டுக்கடன்களைசெலுத்தத் தவறியுள்ள நிலையிலேயே ஹமில்டன் ரிசேர்வ் வங்கி அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குதாக்கல்செய்துள்ளது.

இலங்கையின் சர்வதேச பிணைமுறியில் 25 கோடி டொலர்களைக் கொண்டுள்ள ஹமில்டல் ரிசேர்வ் வங்கி 25 ஆம் திகதி வட்டி உட்பட முழுமையான தொகையை இலங்கைசெலுத்த வேண்டும் என கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

செயின்ட் கிட்ஸ் நெவிசினை தலைமையகமாக கொண்ட இலங்கையின் வங்குரோத்து நிலைக்கு ராஜபக்ஷ குடும்பத்தினர் உட்பட அதன் உயர் அதிகாரிகளே காரணம் என வங்கி தனது மனுவில் தெரிவித்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.06.2022இல் வெளியிடப்பெற்றது.